1981 மார்ச் 3]

[முற்பகல் 9-30]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு உரத்திற்கு மானியம் அளிக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு வேறு எந்த மாநிலத்திற்காவது உரத்திற்கு மானியம் அளிக்கின்றதா? அப்படி என்றால் அதைக் காரணம் காட்டி தமிழகத்திற்கும் மானியம் அளிக்க வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதைப்பற்றிய தகவல் இல்லை. ஆனால் உர விலையை உயர்த்தினால் உற்பத்திச் செலவு அதிகமாக ஆகும் என்பதை எடுத்துச் சொல்லி விவசாய விளைபொருள் விலை நிர்ணயிப்புக் குழுவிலே நெல், கரும்பு போன்றவைகளுக்கு நிர்ணயிக்கின்ற விலையை அதிகமாக்கித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அகில உலக ரீதியிலே பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் விலை அதிகமாகி விட்ட காரணத்தாலேதான் மத்திய அரசு உரத்தினுடைய விலையை உயர்த்த வேண்டி இருக்கிறது என்பதை இந்த அரசு உணருகிறதா? ....(குறுக்கீடு)........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உறுப்பினர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தால் அவையை ஒழுங்காக நடத்த முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசும் மாநில அரசும் மானியம் வழங்குகின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு வழங்குகின்ற மானியத் தொகை எவ்வளவு என்ற விவரம் அமைச்சர் அவர்களிடமிருந்தால் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பாதிப்பாதி.

விவசாய உபயோகத்திற்கு சிமெண்ட் களம் அமைத்தல்.

*வினா எண். 343—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விவசாய மான்யத்தில் விவசாயிகள் உபயோகத்திற்கு சிமெண்ட் களம் அமைக்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்படுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இத் திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : களம் அமைத்தல் விவசாய மானியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் அரசு அளிக்கும் விவசாய மானியத்தின் உதவியுடன் இத் திட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் எத்தனை கிராமங்களுக்கு இப்படிப்பட்ட களங்கள் அமைக்கப்படுகின்றன ? இக்களங்கள் அமைக்கின்ற பணிக்கு விவசாயி மானியத்திலிருந்து செலவழிக்கப்படுகின்ற தொகை போதவில்லை என்று சொன்னால் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தாவது இன்னும் கொஞ்சம் அதிகமாக தொகை ஒதுக்கி களம் அமைக்கின்ற பணியை நடத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் எங்கெங்கு தேவைப்படுகின்றதோ அந்தந்தப் பகுதிகளில் மட்டும் களங்கள் அமைக்கப்படுகின்றன. பொதுவாக பயிர் விளைச்சல் அதிகமாக உள்ள இடங்களில் குறிப்பாக நெல் போன்ற பயிர்கள் அதிகமாக விளையக்கூடிய இடத்தில்மட்டும் களங்கள் அமைப்பது வழக்கம். அந்த வகையிலே விவசாய கால்நடை பராமரிப்பு மானியத்தின் மூலமாக களங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, தற்போது பொதுவாக எல்லா கிராமங்களுக்கும் களங்கள் தேவைப்படுகின்றன. பொதுவாக எல்லா இடங்களிலும் நெல் பயிராகின்றது. ஆகவே களம் தேவைப்படுகின்றது. ஆகவே, அதற்கான தொகை இன்னும் கொஞ்சம் அதிகமாக ஒதுக்கி களம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ? ஒன்றிய பொது நிதியிலிருந்தாவது தொகை ஒதுக்க அரசு அனுமதி அளிக்கலாம். அதற்காவது நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : — தலைவரவர்களே, இப்போது பல்வேறிடங்களில் களத்திலே பயிர்களை போட்டு அடிக்காமல் சாலைகளிலேயே அவ்வாறு செய்யப்படுவதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். ஆகவே எங்கெங்கு களம் அமைப்பதற்குத் தேவையான இடங்கள் கிடைக்கின்றதோ

1981 மார்ச் 3]

அங்கங்கு களங்கள் அமைத்து அதன் மூலமாக பயிர்களை அடிப்ப தற்குரிய வகையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்து கொண்டு வருகிறோம். முதலில் விருப்பம் என்ற திட்டத் தின் அடிப்படையில் அதாவது 'ஆப்ஷனல்' என்ற வகையில் இது இருந்தது. இப்போது அவசியமானது என்ற வகையில் 'ஸ்பெஷல் ஸ்கீம்' என்ற அடிப்படையில் செய்யப்பட்டு வரு கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, பல இடங்களில் போதுமான செலவில் நல்ல முறையில் களம் அமைக்கப்படாத காரணத்தால் அமைக்கப்பட்டு ஓராண்டு காலத்திற்குள்ளாகவே உபயோகமற்ற நிலைக்கு வந்துவிடுகின் றன. ஆகவே அரசு புதிதாக அமைக்கின்ற களங்களையாவது அதிகமான தொகை ஒதுக்கி நல்லமுறையில் அதிகநாட்கள் நன்மை பயக்கின்ற வகையிலே களங்களை சிமெண்ட் களங்களாக அமைக்க சிமெண்ட் போன்றவற்றைத் தாராளமாகத் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. ச. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சிமெண்ட் களங்கள் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் கடந்த 3 ஆண்டு காலமாக எந்தத் தொகுதியிலேயும் இந்த சிமெண்ட் களங்கள் அமைக்கின்ற வேலை எடுக்கப்பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரி யுமா? அதை மாற்றுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் என்னிடத்தில் இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தக் களங்கள் போதிய அளவுக்கு இல்லாததினால் ரோட்டிலேயே இன்றைக்கு இந்த வேலை நடந்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள், அப்படி இருப்பது சில இடங்களில் மட்டும் அல்ல. தஞ்சாவூர் மாவட்டத் திலே இருக்கிற மெயின் ரோடு பூராவிலும், டிரங்க் ரோடிலிருந்து மெட்ராஸ் வரைக்கும், நாகர்கோவிலிருந்து மெட்ராஸ் வரைக் கும் கூட இப்படி ரோட்டிலே நெல்லைக் கொட்டி போரடிக்கும் வேலை நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதனால் பஸ், லாரி, கார் போன்ற போக்குவரத்துக்களுக்கு இடைஞ்சல் ஏற் பட்டு ஆக்ஸிடெண்டுகள் ஏராளமாக நடக்கின்றன. ஆகவே இவைகளை தடுக்கும் பொருட்டாவது ஒரு காங்கீரீட் மெஷர் என்கிற வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1981 மார்ச் 3

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல இதற்கென ஊராட்சி ஒன்றியங்களில் தனியாக நிதி ஒதுக்கீடு கிடையாது. ஆகவே விவசாய கால்நடை பராமரிப்பின் கீழ் தான் இதற்கு நிதி ஒதுக்கப் பெறுகிறது. இது ஒரு அவசியமான திட்டம் என்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை அரசு பரிசிலனை செய்யும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த களங்கள் அமைக்கும் பணியை—தமிழகத்திலே 69 ஊராட்சி ஒன்றியங்களிலே தன்னிறைவுத் திட்டம் செயல்படுவதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அந்த தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் களம் அமைக்கும் பணியையும் ஒரு முக்கிய சிறப்பு அம்சமாக சேர்த்துக் கொண்டு இந்த அரசு அதை செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்தப் பணி வராது. அந்தத் திட்டத்தின் கீழ் 9 வேலைகள் பிரிக்கப் பட்டு அவைகள் செயல் பட்டு வருகின்றன.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவையின் நாயகர் அவர்களே, (குறுக்கீடு) இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியபோது, களம் அமைப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடித்த நமது தமிழகத்திலே மோட்டாரோட்டி போரடிக்கும் திட்டத்தை நாம் மேற்கொள்ள என்பதைத் தெரிவித்துக் கொள்ள, இந்தக் களங்கள் அமைப்பதற்கு போதிய இடம் இல்லாத காரணத்தால், பயிர் செய்கின்ற களத்து மேட்டிலேயே. பயிர்கள் அறுவடை முடிந்த பிறகு எப்படி நாம் கூட்டங்களில் பேசுவதற்கு பலகைகளை வைத்து மேடையைக் கட்டி, அதை ஒரு தற்காலிக மேடைக்களமாக உபயோகிக்கிறோமோ அப்படியே, அந்தக் களத்து மேடுகளில் பலகைகளை வைத்து நெல் களம் அமைக்க அரசுக்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே. அது பற்றிய திட்டம் இல்லை.